**In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur**
**O.S. 18/2025**
**old (74/2023)**

**Examination of - PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | **சுப்புராயன்** |
| **Father Name** | : | **மன்னக்கோனார்** |
| **Village** | : | அகரம் கிராமம் |
| **Taluk** | : | **கீழ்பென்னாத்தூர்** |
| **Calling** | : | **வழக்கறிஞர்** |
| **Religion** | : | |
| **Age** | : | **58** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.10.2025.**

## முதல் விசாரணை

நான் தற்போது அகரம் கிராமத்தில் வசித்து வழக்கறிஞர் பணி செய்துவருகிறேன். பழனி என்பவர் என்னிடம் 17.03.2022ம் தேதி 75,000/-ரூபாய் பெற்றார் அதற்கு பிரதிபிரயோஜனமாக கடனுறுதிச் சீட்டினை சாட்சிகளான தண்டபானி மற்றும் பச்சையப்பன் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார். மேற்படி கடனுறுதிச்சீட்டினுள் உள்ள தொகையினை வசூல் செய்ய இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதை நான் சொல்லியதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக மேற்படி 17.03.2022ம் தேதி பழனி எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு **வா.சா.ஆ.1** ஆகும். மேற்படி பணத்தை திருப்பி கேட்டும் தராததால் நான் கேட்பு அறிவிப்பினை 24.02.2023ம் தேதி அனுப்பினேன் அந்த கேட்பு அறிவிப்பு **வா.சா.ஆ.2** ஆகும். மேற்படி கேட்பு அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்காக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.3** ஆகும். மேலும் 10.03.2023ம்

தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் கொடுத்த வழக்கறிஞர் பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.4** ஆகும். நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்க வேண்டி பிராத்திக்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்